செய்தி வெளியீடு எண்: 409 நாள்: 26.06.2018

## செய்தி வெளியீடு

## ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம்

இக்கூட்டத்தில் சென்னை, கருவூலக் கணக்குத்துறை, முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர், திரு. தென்காசி சு.ஜவஹர்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

நிதி மேலாண்மை தொடர்பான அரசுப் பணிகள் திறம்பட நடைபெற, மாநில அரசு நிதி மேலாண்மை மற்றும் மாநில அரசு மனித வள மேலாண்மையை இணைத்து ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. தற்பொழுது நடைமுறையில் உள்ள தன்னியக்க கருவூலப் பட்டியல் ஏற்பளிக்கும் முறை, வலை தள சம்பளப் பட்டியல் மற்றும் மின்னணு வழி ஓய்வூதியம் ஆகியன இத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, அரசு ரூபாய் 288.91 கோடி ஒப்பளிப்பு செய்து அரசாணை வழங்கியுள்ளது.

திருவாளர். அக்சென்சர் சர்வீசஸ் பி.லிட்., இத்திட்டத்தின் ஆலோசனை முகமையாக நியமிக்கப்பட்டனர். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு மூன்றாம் நபர் தணிக்கை முகமையாக திருவாளர். பிரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் நிறுவனம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. திட்ட ஒருங்கிணைப்பு நிறுவனமாக திருவாளர் விப்ரோ லிட்., நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்தக் கூடிய அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கான பணிகளும் மென்பொருள் உருவாக்கும் பணிகளும் தற்சமயம் முடிவுற்றுள்ளன. இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது பல்வேறு துறை பணியாளர்கள் / சம்பள கணக்கு அலுவலகம் / மாவட்ட கருவூலம் / சார் கருவூலத்திற்கு பட்டியல் சமர்ப்பிக்க நேரடியாக செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது. இத்திட்டத்தில் மாநில கணக்காயர், பாரத ரிசர்வ் வங்கி, முகமை வங்கிகள், பொது கணக்கு கட்டுப்பாட்டாளர் ஆகிய பங்குதாரர்கள் ஒருங்கிணைக்கப்படுவர்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள சுமார் 29000 பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் (**Drawing and Disbursing Officers**) நேரடி இணையத்தின் மூலம் சம்பளப்பட்டியல் மற்றும்

இதர பட்டியல்களை கருவூலத்தில் சமா்ப்பிக்க இயலும். மேலும் இத்திட்டத்தில் அரசின் வருவாயினை இணையவழி மூலம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளதால் அரசின் நிகழ் நேர வரவினை உடனுக்குடன் அறிய இயலும். நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் எண்ம ஒப்பம் (Digital Signature) மற்றும் விரல் ரேகைப் பதிவுமுறை (Biometric) மூலம் உறுதிப்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் நிதி நிலை விபரம் உடனுக்குடன் அரசுக்குக் கிடைப்பதுடன் நிதி மற்றும் மனித வள மேலாண்மை நிர்வாகம் சிறப்பாக நடைபெற வழி வகுக்கும். தேவையற்ற கால தாமதமும் முறைகேடுகளும் தவிர்க்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் சுமார் 9 இலட்சத்திற்கும் மேற்பட்ட அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேடு பராமரிப்பு எளிமையான முறையில் கணினி மயமாக்கப்பட்டு சம்பளப்பட்டியல், பதவி உயர்வு, மாறுதல்கள், விடுப்பு மற்றும் இதர விபரங்கள் அவ்வப்போது உடனுக்குடன் பதியப்படும். இப்பணியினை அக்டோபர் 2018க்குள் முடித்திட எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் அக்டோபர் 2018-ல் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அரசுப் பணியில் சேர்ந்தது முதல் ஓய்வு பெறும் வரை உள்ள அரசுப் பணியாளர்களின் பணி வரலாறானது முழுமையாக இத்திட்டத்தின் மூலம் கணினிமயமாகிறது.

இதன் மூலம் பணிப்பதிவேடுகளைப் பராமரிக்கும் பணியிலிருந்து விடுபட்டு அலுவலா்கள் தங்களது துறையின் ஆக்கபூர்வப் பணிகளில் ஈடுபடமுடியும். இதனால் பல்வேறு அலுவலகங்களுக்கு இடையேயும் வெவ்வேறு ஊர்களுக்கு இடையில் பணிப்பதிவேடுகள் மாற்றப்படுவதால் ஏற்படும் காலவிரயம் குறைவதோடு, பணிப்பதிவேடு காணாமல் போகக்கூடிய சூழ்நிலையும் முடிவுக்கு வரும். பணிப்பதிவேடுகள் அவ்வப்போது கணினி மூலம் ஆய்வு செய்யப்படுவதால் நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்பட்டு ஓய்வூதியம் தாமதமின்றி வழங்கப்படும். பணியாளர் தொடர்பான அரசின் ஆய்வுக்கும் திட்டமிடலுக்கும் இக்கணினி ஆவணங்கள் உதவும். ஆதாரப் பூர்வமான பணி விபரங்கள் கணினியில் இருப்பதினால் பணிமாற்ற முடிவுகள் தாமதமின்றி முறையாக எடுக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் சம்பள கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்)ல் உள்ள ***5393*** எண்ணிக்கையிலான அரசு ஊழியர்களின் பணிப்பதிவேடுகள் கணினிமயமாக்கப்படும் பணிகள் முடிவடைந்துள்ளன.

இத்திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்த, நான்கு நாட்கள் பயிற்சி சில பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கும், கூடுதலாக இரண்டு நாட்கள் பயிற்சி கருவூல அலுவலர்களுக்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, அனைத்து பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியின் கீழ். சம்பளம் மற்றும் சம்பளம் சாரா பட்டியல்கள் தயாரித்தல், மின் பணிப்பதிவேடு பராமரித்தல். ஓய்வூதிய கருத்துருக்கள் தயாரித்தல் மற்றும் இதர இனங்கள் தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களுக்கும் மேலும் பட்டியல் கடவு செய்தல், காப்பறை செயல்பாடுகள், மின் அலுவலகம், மற்றும் இதர இனங்கள் குறித்து கருவூலத்துறை அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**2. சம்பளம்:**

மேலும் கடந்த 2017 – 2018ம் நிதியாண்டில் சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்) சென்னையில் அரசு ஊழியர்களுக்கான ஊதிய செலவினமாக ரூ.8905.45 கோடி சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்) மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அரசின் வரவினமாக இந்நிதியாண்டில் மட்டும் 638.09 கோடி அரசுக் கணக்கில் சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்) வழியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் திரு எச்.கிருஷ்ணன்உன்னி, இ.ஆ.ப., துணைச் செயலாளர், நிதி (வரவு செலவு), திருமதி சுகுணசுந்தரி, கூடுதல் செயலாளர், நிதித் துறை, திரு பி.எம். அம்பலவாணன், கூடுதல் செயலாளர், பொதுத் துறை, திரு.ஏ.பி.மகாபாரதி, கூடுதல் இயக்குநர், (மின் ஆளுகை), கருவூலம் மற்றும் கணக்குத்துறை, திரு சு. கிருஷ்ணமூர்த்தி சம்பளக் கணக்கு அலுவலர் மற்றும் அனைத்து துறை பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**